LIBRARY
29 JUN 2011
Eastern University, Sri Lanka

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருட பொதுக்கலைமாணித் தேர்வு - 2007/2008 (வெளிவாரி)
(மே 2011)

## GEO 101 புவியியலின் அடிப்படைகள்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தது இவ்விருவினாவையேனும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

எழுத்துத் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

### பகுதி – I

01. புவியியற்கற்கை நெறியின் உள்ளடக்கம், நோக்கம், அவற்றின் வளர்ச்சிப் போக்கு பற்றி ஆராய்க.

(20 புள்ளிகள்)

02. பொருத்தமான தரவுகளின் துணையுடன் கதிர்வீசல் சமனிலை பற்றி விளக்குக.

(20 புள்ளிகள்)

03. (அ) வானிலையாலழிதல்(weathering) என்பதனால் கருதப்படுவது யாது?

(07 புள்ளிகள்)

(ஆ) மண்ணுருவாக்கக் காரணிகள் மண்படை விருத்திக்கு எவ்வாறு பங்களிக்கின்றது? ஆராய்க.

(13 புள்ளிகள்)

04. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினிற்கு விளக்கக் குறிப்புரை தருக.

(அ) நீரியல் வட்டம்
(ஆ) தகட்டசைவு
(இ) காலநிலை மாற்றமும், விளைவுகளும்

(10 x 2 = 20 புள்ளிகள்)

## பகுதி – II

05. 'சூழல் ஆதிக்கவாதம்', 'மானிட ஆதிக்கவாதம்' பற்றிய கருத்துக்களை பொருத்தமான உதாரணங்கள்வாயிலாக தற்கரீதியாக பரிசீலிக்குக.
(20 புள்ளிகள்)

06. (அ) குடித்தொகைப் பரம்பலை தீர்மானிக்கின்ற காரணிகளை எடுத்துக்காட்டுக.
(05 புள்ளிகள்)

(ஆ) பௌதிகக் காரணிகள் குடிப்பரம்பலை தீர்மானிப்பதில் எந்தளவுக்குச் செல்வாக்குச் செலுத்துகின்றன?
(07 புள்ளிகள்)

(இ) குடிவரையியல் நிலைமாறு கட்டங்களை உலக நாடுகளை உதாரணங்காட்டி விளக்குக?
(08 புள்ளிகள்)

07. (அ) செறிவான பிழைப்பூதிய பயிர்ச்செய்கையின் அண்மைக்காலப் போக்குப் பற்றி ஆராய்க.
(10 புள்ளிகள்)

(ஆ) பெயர்ச்சிப் பயிர்ச்செய்கை முறையினை மேற்கொள்வதனால் ஏற்படக்கூடிய சூழலியல் தாக்கங்களை மதிப்பிடுக.
(10 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினுக்கு** விளக்கக் குறிப்புரை தருக.
(அ) மூன்றாம் உலக நாடுகளில் வறுமையும், போசாக்கின்மையும்
(ஆ) மிகைக் குடித்தொகையும், வளமுகாமைத்துவமும்
(இ) மூன்றாம் உலக நாடுகளில் நகரமயமாக்கலுடன் தொடர்பான பிரச்சினைகள்
(10 x 2 = 20 புள்ளிகள்)

**********